செ.வெ.எண்: 961/2017 நாள்:11.12.2017

# பத்திரிகைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடலில் ஏற்பட்ட ஓகி புயலின் காரணமாக, காற்றின் சீற்றத்தால் திசைமாறி பிறமாநில மீன்பிடித் துறைமுகங்களில் கரைசேர்ந்ததைத் தொடர்ந்து, மீன்வளத்துறையைச் சேர்ந்த அலுவலர்களும், மூத்த இந்திய ஆட்சிப்பணியாளர்களும் பிறமாநிலங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். மேற்படி அலுவலர்கள் ஆய்வு செய்து அனுப்பிய மாநிலங்கள் வாரியாக சேர்ந்துள்ள 2707 மீனவர்கள் பெயர் 315 மீன்பிடிபடகுகள் பெயர்கள் அடங்கிய பட்டியல் மீனவகிராம பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக 09.12.2017,மற்றும்10.12.2017 தேதியிட்ட பட்டியல் அரசால் வெளியிடப்பட்டது.

தற்போது 199 மீனவர்கள் மற்றும் 26 படகுகள் அடங்கிய மூன்றாவது பட்டியல் விபரங்கள் சரிபார்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது. மேலும் இந்த விபரங்களை மீனவ கிராம பொது மக்களின் தகவலுக்காக www.kanyakumari.nic.in என்ற வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

சஜ்ஜன்சிங் ரா.சவான்,
மாவட்டஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்.